1989 ஏப்ரல் 5]

கோவை மாநகராட்சியில் மின் விநியோகம்.

37 (* வினா எண்—154: திரு. கே. ரமணி) மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சியில் தினமும் காலை 7-00 மணி முதல் 10-00 மணிவரை மின் விநியோகம் நிறுத்தப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தொடர்ந்து மின்சாரம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, (அ) மாநிலத்தில் உள்ள சில அனல் மின் நிலையங்களில் எதிர் பாராதவிதமாக ஏற்பட்ட கோளாறுகள் காரணமாக மின் உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதால் நகர்ப்புறங்கள், 4 பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் காலையில் $1\frac{1}{2}$ மணி நேரமும் மாலையில் $1\frac{1}{2}$ மணி நேரமும் மின் விநியோகம் நிறுத்தப்படுகிறது.

(ஆ) நிலைமையை விரைவில் சீர் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, கோவை மாநகரத்தில் நமது மாண்புமிகு அமைச்சர் சொன்ன மாதிரி $1\frac{1}{2}$ மணி நேரம் அல்ல, அதற்கு மேல் சில சமயங்களில் 2, 3 மணி நேரங்கூட மின்சாரம் வராமல் தடைப்பட்டு விடுகிறது. அதுவும் முக்கியமான நேரத்தில் மின்சாரம்நின்று விடுகிறது. அதற்கு ஒட்டு மொத்தமாக மின்சாரம் உற்பத்தி செய்வதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. இங்கே அனல் மின் நிலையத்தில் கூட பிரச்சினை இருக்கிறது என்று செய்தி வந்திருக்கிறது. அதுவும் உண்மை என்று நினைக்கிறேன். ஆனால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் இங்கே நிச்சயமாக மின் விநியோகத்தில் கோளாறு இருக்கும் என்று தெரிய வருகிறது. இது குறித்து, அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா? மேலும் சரியான மின் ஓட்டம் இல்லாததாலும் இப்படி அடிக்கடி ஏற்படுகிறது என்றும் சொல்லுகிறார்கள். ஆகவே அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரைப் பொறுத்த வரையில் மின் விநியோகம் செய்வது மின் வாரியம் அல்ல. அங்கே இருக்கின்ற மாநாகராட்சிதான் மின் விநியோகம் செய்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய குறிப்புகள்படி அவர்கள் சரியாக மின் விநியோகம் செய்ய அறிவுறுத்தப்படுவார்கள்.

திரு. அ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியில் சேர்க்கப்பட்ட பேரூராட்சிப் பகுதிகளில் மின்சாரம் தற்சமயம் மின் வாரியம் மூலம் வினியோகிக்கப்படுகிறது. இதனால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இப்பகுதிகளில் மின் வினியோகத்தை மாநகராட்சியிடம் ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுக்கு அது இன்னும் நல்ல சௌகரியமாக இருக்கும் என்று உறுப்பினர் கருதினால் அதை செய்வதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே; கோவை மாவட்டம், திருப்பூர் நகரத்திற்கு மேட்டுப்பாளையத்திலிருந்து வரக்கூடிய குடிநீர் தடையின்றி வருவதற்காக கடந்த 4, 5 ஆண்டுகளுக்கு முன்னால் பீடர் லைன் உருவாக்கப்பட்டு, முறையாகத் தடையின்றி தண்ணீர் விநியோகம் நடந்து கொண்டிருந்தது. தற்போது பீடர் லைனுக்கும் மின் வெட்டு ஏற்படுத்தும் காரணத்தால், 6 நாளைக்கு ஒரு முறை தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது, 10 நாட்களுக்கு ஒரு முறை விநியோகம் ஆகிறதென்பதை அரசு அறியுமா ? அப்படி அறியுமானால் பீடர் லைனுக்கு தனியாக மின்சாரம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொதுவாக குடிதண்ணீர் எடுக்கப்படுகின்ற இடங்களிலே, அவர்களுக்கு 24 மணி நேரமும் மின் சப்ளை உறுதி செய்யப்பட்டு, மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்துள்ளதை மேற்கோள் காட்டி, உடனடியாக நிவர்த்திசெய்ய ஆவன செய்யப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே கோயம்புத்தூர், தஞ்சாவூர், இன்னொரு நகரம், இந்த மூன்று நகராட்சிகள், மாநகராட்சிகள் மின்சாரத்தைப் பொதுமக்களுக்கு நேரடியாக விநியோகம் செய்கின்றன. இப்போது கோவை நகராட்சி, சிங்காநல்லூர் நகராட்சி இணைந்து மாநகராட்சியாகி இருக்கின்றது. எங்களுக்கு அதிக மின்சாரம் தேவையென்று மாநகராட்சி மின்சார இலாக்கா நம்முடைய மின் வாரியத்திற்குப் பல முறை விண்ணப்பித்தும், கேட்டும் தேவையான மின்சாரத்தை மின்சார வாரியம் அந்த மாநகராட்சிக்கு வழங்காத காரணத்தால், அங்கே மின் தட்டுப்பாடு மிக அதிகமாகி மின்வெட்டு பல முறை ஏற்படுகிறதென்ற செய்தி மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்கு வந்ததா?

அதை உடனடியாக மாற்றி, தேவையான மின்சாரத்தை அந்த மாநகராட்சிக்குத் தருவதற்கான நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்களுடைய கேள்விக்குப் பதிலாக இதுவரையில் கோவை மாநகராட்சிக்குப் பற்றாத அளவுக்கு மின்சாரம் தருகிறார்கள் என் குறிப்பு எதுவும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மின் உற்பத்தியில் சில பல கோளாறுகள் ஏற்பட்டிருக்கிற காரணத்தால், ஆங்காங்கு மின் விநியோகம் தடைப்பட்டிருக்கிறது என்பது உண்மை. அவை விரைவில் சீர் செய்யப்பட்டவுடன் கோவை மாநகராட்சிக்குத் தேவையான அளவுக்கு மின்சாரம் வழங்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதால் விநியோகம் சிரமமாக இருக்கிறதென்பதை ஏற்றுக் கொண்டாலும், அதைக் களையக் கூடிய நடவடிக்கையாக தமிழ் நாட்டிலேயுள்ள சர்க்கரை ஆலைகளில் மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம். அந்த ஆலைகளுக்கு வருடத்தில் 6 மாதங்களுக்கு கரும்பு கிடைக்காத காரணத்தால் இயங்காமல் இருக்கின்றன. அவைகளுடைய ஸ்டீம் டர்பைன் உற்பத்தித்திறன் 60 மெகாவாட்டாகும். எனவே அந்த ஆலை அதிபர்களுடன் தொடர்பு கொண்டு, 6 மாத காலத்திற்கு அவர்களை அதிலிருந்து மின்சார உற்பத்தி செய்து, தமிழ்நாட்டு மின்சார வாரியத்திற்கு வழங்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா? மேலும் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய மொத்த மின்சாரத்தில் 49 சதவிகிதம் உயர் அழுத்தம், குறைவு அழுத்தம் தொழிற்சாலைகள் உபயோகிக்கின்றன. இதில் பெரும்பகுதியான தொழிற்சாலைகள், உயர் அழுத்த மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கேப்டிவ் பவர் ஜெனரேட்டர்கள் வைத்திருப்பதால், அவர்களுக்கு வழங்கக்கூடிய டீசலை ரூ. 3.90 என்பதற்குப் பதிலாக ரூ. 2.90 என்று வழங்கினால், அவர்களே தேவையான அளவுக்கு மின்சாரம் உற்பத்தி செய்யலாம். இதனால் அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய இழப்பை சரிசெய்து, தமிழ் நாட்டினுடைய மின்சாரத் தட்டுப்பாட்டை ஒரே நாளில் சரி செய்யலாமென்ற உண்மை நிலை இருப்பதால், அரசாங்கம் இதைப் பற்றி முழுப் பரிசீலனை செய்யுமா என்பதைத் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியதுபோல புதிதாக அமைக்கப்படுகிற சர்க்கரை ஆலைகளிலே கரன்ட் உற்பத்தி செய்யப்படும் ஏற்பாடு நடைபெற்று, இரண்டு இடங்களிலே பவலை நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்

அவர்களுடைய குறிப்புகளை மேற்கோள்காட்டி, அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென்று தெரிவித்துக்கொள்வதோடு டீசலை மத்திய அரசு ரூ. 2.90க்கு குறைத்துக் கொடுத்தால், அதை அவர்களுக்கு வழங்குவதில் இந்த அரசுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள எண்ணூர் அனல் மின் நிலையம், இந்த அரசு பொறுப்பேற்பதற்கு 4 அல்லது 5 மாதங்களுக்கு முன்பே பழுதுபட்டிருந்தும், இதுகாறும் அது சீர் செய்யப்படவில்லை என்று தெரிய வருகிறது. அதைச் சீர் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்றும், எவ்வளவு விரைவில் அது சீர்செய்யப்படும் என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றவுடன் விரைவாக சீர்செய்வதற்காக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டபோதே மேலும் ஒரு யூனிட் பழுதடைந்து, அதுவும் சீர் .செய்யப்பட்டு தற்போது மின் உற்பத்தி நடந்து கொண்டிருக்கிறது. இப்போது அதன் வேலைகள் முடிவடைந்து 15 நாட்களுக்குள்ளாக ஒரு யூனிட்டும், 7-வது மாதத்தில் இன்னொரு யூனிட்டும் செயல்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) பேரவையின் விவாதங்கள் இடையூறுகள் இல்லாமல் சுமுகமாக நடைபெற வேண்டியதன் அவசியம் குறித்து

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் வைக்கப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கையின்மீது முக்கியமான பொது விவாதம் முடிந்து, ஒவ்வொரு மானிய மாக